சொன்ன கருத்துக்கள் பயன்படவேண்டும். அந்த வகையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்காவிட்டாலும் ஒத்தி வைத்தது மாதிரி அதிக நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது. எனவே இதற்கு மேலும் ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரம் 1 மணி நேரம்தான். ஆனால் இங்கே 2 மணி நேரத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளப் பட்டு விட்டது.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள்—நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256 (1)-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.—

(1) மாண்புமிகு பேரவைத் தலைவர்—
திரு. க. ராசாராம்.
(2) மாண்புமிகு முதல் அமைச்சர்—
திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.
(3) மாண்புமிகு பேரவை முன்னவர்—
டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
(4) மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்—
திரு. சு. இராமச்சந்திரன்.
(5) மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்—
டாக்டர் மு. கருணாநிதி.
(6) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—
திரு. பி. எச். பாண்டியன்.
(7) திரு. க. அன்பழகன்.
(8) திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்.
(9) திரு. நா. சுந்தரராஜ்.
(10) திரு. என். சங்கரய்யா.
(11) திரு. சோ. அழகர்சாமி.
(12) திரு. குமரி அனந்தன்.
(13) திரு. திருப்பூர் இரா. மணிமாறன், அரசுகொறடா.
(14) திரு. எஸ். ஆண்டித்தேவர்.
(15) திரு. ப. நெடுமாறன்.
(16) திரு. பி. முகமது இஸ்மாயில்.
(17) திரு. ஜி. மூர்த்தி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS